Registered as a Newspaper

# உதயன்




சுடர் : 39
கதிர் : 340

வியாழக்கிழமை
31 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 14
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 24

விலை – ரூபா 50

## அரச அதிகாரத்தை கைப்பற்ற முடியும்!



### பலவீனமான பாதையில் பயணிக்கின்றார் அநுர

கொழும்பு, ஒக்ரோபர் 31

**அரசாங்கம் தற்போது மிகப்பலவீனமான பாதையில் பயணிக்கின்றது. இதைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சியில் இருந்தவாறே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.**

23

## மருத்துவர் அர்ச்சுனாவுக்கு நீதிமன்றத்தால் பிடியாணை

மன்னார், ஒக். 31

வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகாத குற்றத்துக்காக, மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்த வழக்கில் அவருக்கு ஏற்கனவே பிணை வழங்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய வழக்கு

23






முச்சந்தி முரளி

"அந்த வில்லுத்தகடு பிடியாணையையும் பிரசாரமா பாவிக்கக்கூடிய ஆள் கண்டியளோ"

## அரச அலுவலர்கள் நேற்று ஆர்வத்துடன் வாக்களிப்பு!

வவுனியா, ஒக். 31

பொதுத்தேர்தலை முன்னிட்டு, தபால்மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமான நிலையில், அரச அலுவலர்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர்.

மாவட்டச் செயலகங்களின் அலுவலர்கள், பொலிஸார் மற்றும் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் என்போருக்கே நேற்று வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் தமது வாக்குகளை குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் செலுத்தியுள்ளனர்.

பொதுத்தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு இம்முறை 7 இலட்சத்து

23

## உயர்தரப் பரீட்சை நவம்பரில் நிச்சயம்

கொழும்பு, ஒக். 31

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை இடம்பெறுமென இலங்கைப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

23

## முறைப்பாடு 1,042

கொழும்பு, ஒக். 31

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை ஆயிரத்து 42 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள்

23

## 'ஜேசிபி' வாகனம் தீவைத்து எரிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 31

வடமராட்சி, கரணவாய் கிழக்குப் பகுதியில், வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜேசிபி வாகனமொன்று நேற்று முன்தினம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான ஜேசிபி வாகனமே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

## அதீத போதையால் இளைஞர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31

அளவுக்கு அதிகமான போதைப்பொருளை நுகர்ந்த 21 வயதான இளைஞன் படுக்கையில் உயிரிழந்துள்ளார். உரும்பிராய் தெற்குப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞனின் தாய் உயிரிழந்த நிலையில், தந்தையார் மற்றும் சகோதரி ஆகியோர் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர்.

23

## கற்கோவளத்தில் கல்லால் குத்தி கணவன், மனைவி படுகொலை!

### வடமராட்சியில் கொடூரம்; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 31

வடமராட்சி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் கணவன், மனைவி இருவர், சித்திரவதைக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கற்கோவளம் பகுதியிலேயே இந்தப் பயங்கரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது-53) மற்றும் அவரது மனைவியான

23

## 6ஆம் திகதி முதல் மழை தீவிரமடையும்

யாழ்ப்பாணம், ஒக். 31

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், எதிர்வரும் 6ஆம் திகதிமுதல் மழை தீவிரமடையும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தீபாவளி நாளான நாளை (இன்று) மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதேவேளை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இடையிடையே சிறிய மழை

23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்த் தேசியவாதிகள் என்ன செய்தனர்?

### அங்கஜன் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.31
எம் மக்களை இவ்வளவு காலமாக வழிநடத்திய தமிழ்த்தேசியவாதிகள் சாதித்தது என்ன? எம் மக்களை வெளிநாடுகளுக்கு புலம்பெயர வைத்து தொகையை பெருமளவு குறைத்தது தான் அவர்கள் செய்த ஒரே சாதனை.

-இவ்வாறு தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
70வருடங்களாகப் போராடி உயிர்களை, உடைமைகளை பல தலைமுறைகளின் எதிர்காலத்தை இழந்தமையானது எமது சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதற்காகத் தானா? ஏன் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்? தாமே ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு இத்தனை காலமாக வென்ற தமிழ்த் தேசியவாதிகள் மக்களை வாழ வைப்பதற்காக எதையாவது செய்தார்களா? எனவே மக்கள் இந்தத் தேர்தலில் தேடலுடனும் தெளிவுடனும் வாக்களிக்காவிட்டால் அடுத்த 5 வருடங்களில் மேலும் பல இழப்புகளைச் சந்திக்கநேரிடும் - என்றார். (ச-27)

# ஆசனங்களை கைப்பற்றுவதே அரசியல்வாதிகளின் நோக்கம்

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் குமுறல்

**வவுனியா,ஒக்.31**

**இம்முறை தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் வேட்பாளர்கள் பேரம்பேசக்கூடிய ஒருசக்தியாக மக்களின் நன்மைகருதி ஒன்றிணையவில்லை. ஆசனங்களை பெறுவதனை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக தனித்தனியாக தேர்தலில் நிற்கின்றனர். இப்படி நின்று யாருக்காக நீங்கள் கதைக்கப்போகின்றீர்கள்? என்று வடக்கு - கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.**

குறித்த சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்-

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
தமிழரசியல் வாதிகள் ஒன்றிணையவில்லை. அவர்கள் ஆசனங்களைப் பெறுவதை மாத்திரம் நோக்கமாக கொண்டு செயற்படுகின்றனர்.



நீங்கள் ஓர் அணியாக எப்போதாவது திரண்டிருக்கிறீர்களா. உங்களுக்குள்ளேயே போட்டியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி கட்சிகளை பிளவுபடுத்தி தமிழ்த்தேசியத்தையே இன்று இல்லாது செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட தமிழ்மக்களை ஒன்றிணைத்து கலந்துரையாடி ஒற்றுமையாக எப்போது பயணித்துள்ளீர்கள். இந்தத் தேர்தலில் அதிகரித்துள்ள சின்னங்களால் தமிழ் மக்கள் குழப்ப நிலையை அடைந்துள்ளனர். இதனால் அரசியலை பற்றியே தெரியாதவர்கள் எல்லாம் நாடாளுமன்றம் செல்லக்கூடிய நிலமையே இன்று ஏற்பட்டுள்ளது.

வடக்கில்12 ஆசனங்களை பெறுவதற்காக 800 ற்கும் மேற்பட்டவர்கள் களம் இறங்கியுள்ளனர். இதன் மூலம் சிங்கள கட்சிகள் ஆசனங்களைக் கைப்பற்றும் நிலைமையினை நீங்களே உருவாக்கப் போகின்றீர்கள். பணத்தை ஏன் இவ்வாறு வீணடிக்கிறீர்கள் அதனை மக்களுக்கு வழங்குங்கள். நீங்கள் மாற்றத்தை உருவாக்குவோம் என்று கூறிவிட்டு இன்னும் கீழ் நிலைக்கே மக்களைத் தள்ளப்போகின்றீர்கள்- என்றனர். (ச-110)



## விஷச்செடிகள் விருட்சமாகி கூட்டமைப்பை அழித்துள்ளன

### குருசாமி சுரேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.31
எமது ஒற்றுமையைக் குலைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நடப்பட்ட விஷச்செடிகள் தற்போது விருட்சமாகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சீர்குலைத்துவிட்டது என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

மூளாயில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தென்னிலங்கையின் அரசியல் நிரலுக்கு ஏற்ப அதன் இலக்குகளை நிறைவேற்ற முனைந்தமையால்ஒற்றுமை சீர்குலையப் பட்டுள்ளது.

அந்த வகையில் அனைத்து தமிழ்த் தரப்புகளையும் பொது அமைப்புகளையும் ஒன்றிணைத்து ஜனநாயக தமிழ்த் தேசியம் என்று வரையறுக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட, சீராக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பின் கீழ் பயணிக்க ஆரம்பித்துள்ளோம் - என்றார். (ச-27)

## ஜே.வி.பி.யினர் நல்லவர்கள்

### கஜதீபன் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.31
ஜே.வி.பி.யினர் மிகவும் நல்லவர்கள். ஏனென்றால் உண்மையான விடயங்களை அவர்கள் பகிரங்கமாக சொல்கின்றார்கள் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

மூளாய் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜே.வி.பி.யினுடைய பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை எனவும், 13 ஆவது சீர்திருத்தம் நாட்டுக்கு தேவையற்றது,.

பதின்மூன்றாவது சீர்திருத்தத்தை நாங்கள் தீர்வாக கொள்ளமாட்டோம். நான் மாகாண சபை உறுப்பினராக இருந்ததால் இதைப்பற்றிச் சொல்வதற்கு உரிமை உள்ளது எனவும், மஹிந்த ராஜபக்சவை விட சிங்கள பௌத்தத்தை மிக ஆழமாக நேசிக்கின்றேன் - என்றார். (ரி-27)

## தாக்குதலுக்கு அஞ்சோம்!

### மணிவண்ணன் சாட்டை

யாழ்ப்பாணம், ஒக்.31
எம்மீதான தாக்குதல் சம்பவங்கள் ஊடாக எமது அரசியல் பயணத்தை எவராலும் தடுக்கமுடியாது என யாழ். தேர்தல் மாவட்டத்தில், தமிழ்மக்கள் கூட்டணியின் சார்பில் மான் சின்னத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது கட்சியினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தலாகும். சட்டத்தையும் அமைதியையும் விரும்புகின்றவர்களும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கண்டனம் தெரிவிக்கவில்லை. எம்மீதான தாக்குதல் சம்பவங்கள் ஊடாக எமது அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (ச-20)



## மன்னார் ஆயருடன் முன்னணி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.31
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது தற்கால அரசியல் களநிலவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ச-27,66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மனம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ், கிளிநொச்சி மாவட்டங்கள்

சுதந்திரம் **எமது** பிறப்புரிமை
பொது வாக்கெடுப்பு **எமது** கோரிக்கை



### சிவாஜிலிங்கம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
செயலாளர் நாயகம் தமிழ்த் தேசியக் கட்சி

X

**அரசாங்க உத்தியோகத்தர்களே!**
**வணக்கம்**

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால் வாக்களிப்பில் கலந்துகொள்ள இருக்கும் உங்களிடம் ஒரு வேண்டுகோள். இதை ஒரு தனிப்பட்ட வேண்டுகோளாக ஏற்றுக்கொண்டு, எனக்கு சங்குச் சின்னத்திலும் 2 ஆம் இலக்கத்திற்கு மேலேயும் புள்ளடியிட்டு ஆதரிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.

எனது 50 வருட அரசியல் வாழ்வில் நான் நடத்திய போராட்டங்கள், நினைவேந்தல்களை அரசாங்கம் தடுத்ததை உடைத் தெறிந்த விடயம் உட்பட பாராளுமன்றத்தின் உள்ளும், புறமும் போராடியதை நீங்கள் அறிவீர்கள் அந்தப் பயணத்தைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

- தமிழ்த்தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சர்வதேச சமூகம், வடக்கு கிழக்கு மக்கள் புலம் பெயர் தமிழர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கக்கூடிய பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை (Referendum) நடாத்துமாறு கோருகின்றேன்.
- தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமைக்காக போராடுவோம்

| 1 | 2 (X) | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

**ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி**

## பாராளுமன்றத் தேர்தல் - 2024
## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி
(யாழ்.தேர்தல் மாவட்டம்)





**யாழ். மண்ணிலிருந்து மக்களின் உணர்வாய் பாராளுமன்றில் பெண் குரல் ஒலிக்கட்டும்!**

### சசிகலா ரவிராஜ் BSc.Dip.in.Edu

X 7

சங்கு சின்னத்தை தேர்ந்தெடுத்து
சசிகலா ரவிராஜிற்கு வாக்களியுங்கள்!



பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட விநாயகமூர்த்தி சகாதேவன் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

(ம-27)



## பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
### இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

2

### இம்மானுவல் ஆனல்ட்
B.A (Hons) Phil.Spl
MSS Limra International (USA)
AMTC Limra International (USA)

- முன்னாள் முதல்வர், யாழ் மாநகர சபை.
- முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.
- மொழிப்பற்றாளன்.

X



"தமிழரின் தாகம் தமிழ்த் தேசியம்"
தமிழ் தேசியத்திற்காய் என்றும் தடம்மாறாத பயணம் ...

# மக்களின் குரலாக ஒலிக்கும் இளையோரை தெரிவுசெய்க

*வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் தெரிவிப்பு*

வவுனியா,ஒக்.31

தமிழ்த்தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட இளைஞர்களுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்கி உரிமைக்குரலை வலுப்படுத்த ஆதரவளிக்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் செந்தில் நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் எமது மக்களின் வாக்குகள் என்றுமில்லாத வகையில் சிதற டிக்கப்படக்கூடிய ஒரு நிலமை காணப்படுகின்றது.

எனவே வன்னிமக்கள் வெற்று வாக்குறுதிகளுக்காக ஏமாறாது கடந்தகாலங்கள் தொடர்பாகவும் அவர்களது கொள்கை நிலைப்பாடு தொடர்பிலும் நன்கு அறிந்து வாக்களிக்க வேண்டும்.

மக்களின் குரலாக பரிணமிக்கக் கூடியவர்களை அதிலும் குறிப்பாக இளைஞர்களை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியம் தொடர்பில் அக்கறை செலுத்தவேண்டும்.

தமிழ்த்தேசிய எண்ணக்கருவோடு மக்கள் பணியாற்றுகின்ற இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உங்கள் வாக்குகளை இம்முறை வழங்க வேண்டும் - என்றார்.

(ச-110)

## அவைருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
## பாராளுமன்றத் தேர்தல் 2024



யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் சுகாதாரத்துறைக்கு மேலும் வலுச்சேர்க்க அனுபவம் வாய்ந்த மருத்துவ நிர்வாகியான Dr. S. சிறீபவானந்தராஜா அவர்களுக்கு வாக்களிப்போம்.

X 9

### Dr.S.சிறீபவானந்தராஜா
(MBBS, M.Sc. Medical admin)
முன்னாள் பிரதிப் பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தீபாவளி வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 31
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் தீபாவளித் திருநாளன்று நாளை வியாழக்கிழமை சிறப்பு அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நாளை காலை 7 மணிக்கு துர்க்கை அம்பாளுக்குச் சிறப்பு அபிஷேகமும், காலை 8 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி-66)

+++ +++

யாழ்ப்பாணம், ஒக். 31
தீபாவளி சிவகுரு சங்கமம் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 5 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் கேட்டுள்ளார். (ரி-66)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 31
நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தான கந்தசஷ்டி விரத உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது. 7 ஆம் திகதி வியாழக்கிழமை 6ஆம் நாள் உற்சவத்தில் சூரசம்ஹாரமும், 8ஆம் திகதி புதன்கிழமை பட்டாபிஷேகமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-45)

+++ +++

யாழ்ப்பாணம், ஒக். 31
சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை அருள்மிகு வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் கந்தசஷ்டி விழா 2 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தினமும் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை,வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதியுலா வருதல் இடம்பெறும். 6 ஆம் நாளான 7 ஆம்திகதி வியாழக்கிழமை சூரசம்ஹாரமும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (ச)

+++

யாழ்ப்பாணம், ஒக். 31
சாவகச்சேரி - தாளையம்பதி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கந்தசஷ்டி விழா 2 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 7 நாள்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை,வசந்த மண்டப பூஜை நடைபெற்று சுவாமி உள் வீதியுலா வருதல் இடம்பெறும். 6 ஆம் நாளான 7 ஆம்திகதி வியாழக்கிழமை சூரசம்ஹாரமும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (ச)








## யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் தமிழியல் நூலகப்பிரிவு திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியலுக்கென்று தனி நூலகப்பிரிவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைத் தமிழியல் சேகரிப்புகளை எண்ணிமப் படுத்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்றிட்டத்தின் கீழ், எண்ணிம ஆவணக்காப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் தமிழியல் நூலகப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலகப் பிரிவைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 31
கொழும்புத்துறை, நாவாந்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது ஆயிரத்து 107 குடியிருப்புகள் சோதனையிடப்பட்டன என்று யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புத்துறையில் 588 குடியிருப்புகளும், நாவாந்துறையில் 519 குடியிருப்புகளும் சோதனையிடப்பட்டன. இந்தச் சோதனையின் போது போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்ட 28 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

கட்டுப்பாட்டு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர், டெங்குக்களப் பணியாளர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-17)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 31
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 29 பன்னாலை திருவருள்மிகுசிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'மாணிக்கவாசகரும் அருட்பத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் உற்சாகம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம்.. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். சக ஊழியர்களின் வேலைகளை எடுத்துச்செய்யவேண்டி வரும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படக் கூடும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் உற்சாகமாகச் செய்வீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்ற வர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக் கூடும். பொறுமை அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணை உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மீனம்:** ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**

'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம்.

எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் **'சைக்கிள்'** சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**




**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
இலக்கினை அடைய
**ஒற்றைத் தலைமையில்**
**ஓரணியாவோம்!**



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



## பாராளுமன்றத் தேர்தல் - 2024


யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தபால் மூல வாக்காளர்களே !**





அரச உத்தியோகத்தர்களின்

- தகுதியான பதவி உயர்வுகளுக்குக் குரல்கொடுக்க
- நியாயமற்ற இடமாற்றங்களை எதிர்க்க
- போதிய சம்பள உயர்வை வலியுறுத்த
- மேலதிகக் கடமைநேரக் கொடுப்பனவை முன்மொழிய
- வெளிமாவட்டங்களில் உரிய சேவைக்காலம் நிறைவுற்றும் அல்லற்படும் உங்களின் குரலாக ஒலிக்க



உங்களின் தெரிவு
கனகரட்ணம்
**சுகாஷ்**
(சட்டத்தரணி)




**இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!**



# நாடாளுமன்றத் தேர்தல் - 2024




**தமிழ்த் தேசியத்தின் கடைசி நம்பிக்கை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஐ.ம.கூட்டணி தலைமையில் மாற்றம்?

கொழும்பு, ஒக். 31
ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமைப்பதவியில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளில் சஜித் தொடரலாம் எனவும், எனினும் கூட்டணியின் தலைமைப்பதவியில் மாற்றத்தை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும் எனவும் கூட்டணிக்குள் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. பொதுத் தேர்தலின் பின்னரே இந்த மாற்றம் பற்றி ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படவுள்ளது. (ச-44)

## ஜோன்ஸ்டனின் கார்; இருவர் சரணடைவு

கொழும்பு ஒக்.31
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் சர்ச்சைக்குரிய குண்டு துளைக்காத சொகுசுக் கார் தொடர்பாக இரண்டு சந்தேகநபர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோவின் சர்ச்சைக்குரிய குண்டு துளைக்காத சொகுசுக் கார் அண்மையில் நட்சத்திர விடுதி ஒன்றுக்கருகில் கண்டெடுக்கப்பட்டது.

இந்தச் சொகுசுக் கார் உதிரிப்பாகங்களாக எடுத்து வரப்பட்டதாகவும்,மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை எனவும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

## ரஞ்சன் மீதான மனு நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 31
2024 பொதுத்தேர்தலில் நடிகரும் அரசியல் வாதியுமான ரஞ்சன் ராமநாயக்க சமர்ப்பித்த தேர்தல் வேட்புமனுவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்யுமாறு இலங்கை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரித்து உத்தரவிடுமாறு அடிப்படை உரிமைகள் மனுவை கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அடுத்தாண்டு வரையில் தேங்காய் விலையுயர்வு

கொழும்பு, ஒக்.31
சந்தையில் நிலவும் தேங்காய் விலையேற்றமும் தட்டுப்பாடும் அடுத்தாண்டு வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தேங்காய் விலை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். சந்தையில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 130 ரூபா முதல் 180 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காய் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக நடமாடும் தேங்காய் விற்பனை நிலையங்களை அரசாங்கம் அமைத்து மானிய விலையில் தேங்காய் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆயினும் சந்தையில் தேங்காய் விலை அதிகரிப்பால் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். (ச)


## புதினம் தெரியுமோ?

கலி முத்திப்போட்டுதெண்டது உண்மை தான். இந்தத் தீபாவளிக்கு கூட கொள்ளையும், கொலையுமாத்தான் செய்தியள் வருகுது. அந்தளவுக்கு குற்றங்கள் கூடிக்கொண்டே போகுது. அதிலையும் நேற்று கற்கோவளத்தில நடந்த கொலை ஆகப்பயங்கரம். கொலை நடந்த வீட்டைப் பாக்க போன ஆக்கள் எல்லாம் இப்பிடியும் கோரமாக் கொலை செய்ய ஏலுமோ எண்டு பயப்பிடுற அளவுக்கு நிலைமை இருந்திருக்கு. அவையின்ர கழுத்தை நெரிச்சு, பிறகு அங்க கிடந்த கொங்கிறீட் கல்லால கழுத்து, முகம் எண்டு எல்லாத்தையும் போட்டு குத்தி சாக்கொல்லி இருக்கிறாங்கள். அப்பிடி அந்தப் புருசனையும் பெஞ்சாதியையும் கொலை செய்யிற அளவுக்கு என்ன காரணம் எண்டும் இன்னும் ஒருத்தருக்கும் விளங்கேலை. இத்தனைக்கும் அவர் ஒரு சலவைத் தொழிலாளி. பெரிசா காசு பொருளும் இல்லை. களவும் போன சிலமன் இல்லை. அப்பிடியெண்டால் ஏதோ கறுவியம் வைச்சுத்தான் இந்தக் கொலையைச் செய்திருக்கோணும்.

இந்தக் கொலையில எல்லாரும் ஆறுதல்படுற விசயம் என்னெண்டால், கொலைசெய்யப்பட்டவையின்ர மகள் தப்பினதுதான்.

அவைக்கு ஒரு மகனும், மகளும் தான். மகன் ஏதோ ஒரு சின்ன நாட்டிலயாம். மகள்தான் இவையோட இருந்து படிக்கிறா. அந்தப் பிள்ளையின்ர நல்லகாலத்துக்கு முந்தநாள் சொந்தக்காரர் வீட்டுக்குப் போட்டுது. அங்க போகாமல் வீட்டை நிண்டிருந்தால், கொலை செய்ய வந்தவங்கள் அந்தப்பிள்ளையையும் கோரமாக் கொண்டிருப்பாங்கள்.

ஒருபக்கம் இப்பிடி கொலை நடக்க, இன்னொரு பக்கம் இளம்பெடியன் ஒருத்தன் அநியாயமாச் செத்திருக்கிறான். என்ன காரணமெண்டு பார்த்தால், போதை. ஆள் போதைக்கு கனநாளா அடிமையா இருந்திருக்கிறார். அண்டைக்கு போதை அளவுக்கு மிஞ்சிப்போட்டுது. இத்தனைக்கும் அவரும் பாட்டியும் மட்டும் தான் வீட்டில. கூடப் போதை ஏறினதால நாலைஞ்சு தரம் சத்தி எடுத்துப்போட்டு, உள்ளுக்க போய் ஆள் விழுந்திட்டுது. போதையில தான் இப்பிடி சுரணையில்லாம விழுந்து கிடக்கிறான் எண்டு பேர்த்தியார்காரியும் பெரிசா அதை எடுக்கேலை. ஆனால் அந்தப் பெடியனுக்கு ஒரு லவ்வர் இருக்கிறா. அவாதான் இவன் போன் அடிக்க அடிக்க எடுக்கிறான் இல்லை எண்டிட்டு வீட்டை நேர போய்ப் பார்த்திருக்கிறா. அங்க பெடியன் நினைவில்லாமல் இருக்கிறதைக் கண்டிட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கினம். அங்க போனால் ஆள் செத்து நாலைஞ்சு மணித்தியாலமாகிட்டுது எண்டு கையை விரிச்சிட்டினம். இப்பிடி இந்தமுறை தீபாவளி ஒரு அநியாயச் சாவோடயும், இன்னொரு பக்கம் அநியாயமா நடந்த கொலையோடையும் வந்து சேர்ந்திருக்கு. என்னதான் கண்ணன் ஒரு நரகாசுரனை அழிச்சாலும், இப்ப எல்லாப் பக்கமும் புதிசு புதிசா எக்கச்சக்கம் நரகாசுரன்கள் இருக்கினம் எண்டதைத்தான் இந்தச் சம்பவங்கள் சொல்லுது. இந்த நரகாசுரன்களை வதம் பண்ண ஆர் வரப்போயினம்?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீபங்கள் மாண்புபெற...!

இன்று தீபாவளித் திருநாள். இருளை நீக்கி ஒளி கிடைப்பதையே தீபாவளிப் பண்டிகை குறிக்கிறது. வாழ்வில் ஆன்மீக முன்னேற்றத்துக்காக இருளில் இருந்து ஒளியை நோக்கிய பயணத்தை கொண்டாடும் வைபவமாக, தீபாவளியை புதிய தீபங்களை ஏற்றிக் கொண்டாடுகின்றோம். இன்னும் இரு வாரங்களில் ஒரு பொதுத்தேர்தலை இலங்கை எதிர்கொள்ளவுள்ள நிலையில், பல்வேறுபட்ட தளங்களில் பல்வேறுபட்ட நிலைகளில் இந்தத் திருநாள் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக தமிழர்களுக்கு அமைந்திருக்கின்றது. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற போர், 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழர் தாயகம் எதிர்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பும், அநீதித் தனங்களும் கொஞ்சநஞ் சமல்ல. காணாமற்போனவர்களின் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு என தசாப்தங்களாக நிலவும் பிரச்சினைகள் நாளுக்குநாள் வீரியம்பெற்று வருகின்றனவே அன்றி எந்தவொரு விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டதாகவில்லை.

இன்று, நாளை, இந்தத் தீபாவளிக்குள், எதிர்வரும் சுதந்திரதினத்துக்குள் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைகளும் காலப்போக்கில், 'பெருங்கடலில் வீசப்பட்ட கல்' போன்றாகிவிட்டன. பார்வைப் புலத்திலிருந்து கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து சென்ற 'நம்பிக்கை' என்னும் அந்தக் கல், இப்போது காணாமலேயே போய்விட்டது. தமிழர்களின் அரசியல் வேணவாவை பொருளாதார இடர்பாடுகளை, நிவர்த்தித்து நிறைவேற்றக்கூடிய ஆரம்பப்புள்ளியோ குறைந்த பட்சம் அதற்குரிய நம்பிக்கைக் கீற்றொளியோ இப்போது கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இல்லவேயில்லை. இவ்வாறான வெற்று மனோநிலையில் 'நம்பிக்கையற்ற தன்மையில்தான் இந்தத் தீபாவளியை நாம் வரவேற்றிருக்கின்றோம்.

சிங்கள பேரினவாதத்தின் சகுனியாட்டங்கள் போதாதென்று, தற்போது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் பிடுங்குப்பாடுகளோ வார்த்தைகளால் அளந்தெழுத முடியாத அளவுக்கு வானளாவிப்போய் நிற்கின்றன. கட்சிக்கொடிகளும் சின்னங்களும் மக்களின் எண்ணங்களைச் சின்னாபின்னமாக்கியுள்ளன. சரியான தலைமைத்துவமின்றி மக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரசியல் அநாதைகளாக்கப்பட்டிருப்பதை பட்டவர்த்தனமாகவே உணரமுடிகின்றது. அவ்வளவு தூரம் பலவீனப்பட்டும் நலினப்பட்டும் போயிருக்கின்றது தமிழ்த்தேசியம். தமிழ்த் தலைவர்கள் தீர்க்கமாகவும் தீர்மானமாகவும் தெளிந்த அறிவுடனும் செயற்படவேண்டியது காலத்தின் தேவையாக இருக்கையில் பிரித்தாளும் கைங்கரியம் மட்டுமே எஞ்சிநிற்கின்றது. வழக்கமான அரசியல் பகடையாட்டங்களுக்கு எடுபடாமல், மக்கள் மயப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்தி 'மிகக்காத்திரமான முடிவுகளை வெளிப்படுத்தும் வேட்பாளர்களை ஆதரிக்கவும் பலப்படுத்தவும் தமிழ் மக்கள் முன்வரவேண்டும். இன்று ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் தீப ஒளி இனங்களுக்கு இடையிலான விரோதத்தை நீக்கவும், சுபீட்சமான எதிர்காலத்தை கொண்டுவரவும் அருள்பாலிக்கட்டும். அரசியல் கைதிகள் விடுதலை பெறவும், நிலங்கள் விடுவிக்கப்படவும், காணாமலாக்கபட்டோருக்குத் தீர்வுகிட்டும் படியாகவும் இன்றைய தீபங்கள் மாண்பு பெறட்டும்.




# பணம் அச்சிடவில்லை அரசாங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஒக்.31**
**புதிதாகப் பணம் அச்சிடப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் அடிப்படையற்றவை என்று இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.**

இலங்கை மத்தியவங்கி, திறந்த சந்தை செயற்பாடுகள் மூலம் 100 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
மத்தியவங்கியின் திறந்த சந்தை செயற்பாடுகள் மூலம் பணத்தைப் புழக்கத்துக்கு வழங்குவது மத்தியவங்கியின் ஒரு சாதாரண நடவடிக்கையாகும். திறந்த சந்தை நடவடிக்கைகள் மூலம், வட்டி விகிதங்களை நிர்வகிப்பதன் ஊடாக விலை ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதற்கான செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. அதனைப் பணம் அச்சிடல் என்று வரையறுக்க முடியாது.
எனவே, அரசாங்கத்தின் பாதீட்டுக்கு நிதியளிப்பதற்காகப் பணம் அச்சிடலோ அல்லது முறையற்ற விதத்தில் பணத்தைப் புழக்கத்தில் விடும் செயற்பாடோ இடம்பெறவில்லை என்றும் மத்தியவங்கி அறிவித்துள்ளது. (ச-இ)

## 2025 மார்ச்சில் சா/த பரீட்சை!

கொழும்பு, ஒக். 31
2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளது.
கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் முதலாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## லிட்ரோ திரவ எரிவாயு ஒப்பந்தம் பரிமாற்றம்

கொழும்பு ஒக். 31
2025 ஆம் ஆண்டுக்கான லிட்ரோ திரவ எரிவாயு ஒப்பந்தத்தை எம்.எஸ்.வர்த்தக நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இந்த நிறுவனம் ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றில் திரவ எரிவாயு விநியோகத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)




## பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 31
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மேலும் தீபாவளி கொண்டாட்டங்கள் இடம்பெறும் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபரால், சகல பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## குளவி கொட்டி ஒருவர் சாவு!

கொழும்பு, ஒக். 31
கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிதிரிகல அணைக்கட்டுக்கு அருகில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 75 வயதுடைய நபர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

**நாளை**
**01.11.2024**
வெள்ளிக்கிழமை - ஐப்பசி - 15
சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 -12.03

**நாளொரு நல்வார்த்தை**
**அவநம்பிக்கை பலவீனத்துக்கு வழிவகுக்கிறது; நம்பிக்கை ஆற்றலுக்கு வழிவகுக்கிறது.**
- வில்லியம் ஜேம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்பார்ப்புகளை மலரச் செய்வோம்



## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுரகுமார

இருள் நீங்கி ஒளிமயமாவதை அடையாளப்படுத்தும் முகமாக உலக வாழ் இந்து பக்தர்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூறும் வகையில் இந்நாள் அமைந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தை தேடிவந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புகளை சுமந்துக்கொண்டிருக்கின்றனர். இத்தனை நாள் களாக இலங்கையை ஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அநீதி, வேறுபாடுகள், பிளவுபடுத்தல், வெறுப்புப் பேச்சுகள், வன்முறைகள் என்பதை முழுமையாக துடைத் தெறிந்து சமூகத்தை ஒன்றுபடுத்துவோம். தீபாவளி தினத்தில் அனைத்து வீடுகளிலும், நகரங்களிலும் ஏற்றப்படும் ஆயிரக்கணக்கிலான விளக்கு ஒளிகள் அனைவரினதும் மனங்களில் நட்புறவு மற்றும் ஞானத்தின் ஒளியை பரவச் செய்வதாக அமையட்டும் என பிரார்த்திப்பதோடு இலங்கைவாழ் இந்து பக்தர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீமைகள் விலக்கிடும் தீபாவளித் திருநாள்

**மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்**

ஐப்பசி மாதத்திலே கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் வருகின்ற பண்டிகையே தீபாவளித் திருநாள் ஆகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நரகாசுரனை வதம் செய்தார். அவன் இறக்கும் தருணத்தில் பகவானிடம் சில வரங்களைக் கேட்டான். அதாவது "தான் இறக்கும் தினத்தை உலகிலுள்ள மக்கள் எவ்விதத் துக்கம், விசாரம் இன்றி அன்றைய தினம் மங்கள ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி விருந்துண்டு சந்தோசமாகக் கொண்டாடவேண்டும்" என்பதாகும். நரகாசுரனின் வேண்டுதலுக்கு இணங்க அவனுக்கு வரம் கொடுத்து அத்தகு திருநாளை எல்லா மக்களும் கொண்டாட வைத்தார். அன்றிலிருந்து நரகாசுரனை வதம் செய்த நாளை "தீபாவளி" பண்டிகையாக சகலரும் கொண்டாடி வருகின்றார்கள்.

### "எண்ணெய் ஸ்நானம்"

அன்று எண்ணெய் ஸ்நானம் செய்தால் மிகவும் புண்ணியம் என்பார்கள். எண்ணெயில் லஷ்மியும், வெந்நீரில் கங்கையும் வருவதால் கங்கா ஸ்நான பலன் கிடைக்கும். தீபாவளித் திருநாள் அன்றே சகல நீர் நிலை எங்கும் கங்கை இருப்பதாக ஐதீகம். எனவே இத்தினத்தில் அந் நீர்நிலைகளில் நீராடினால் கங்கையில் நீராடிய பலன் உண்டாகும். தீபாவளிப் பண்டிகையின் பெருமைகளை காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம் போன்ற ஆகமங்கள் அதன் உள்ளார்ந்த தத்துவத்தை விளக்கி இருக்கின்றன.

### பட்டாசு கொளுத்துவது ஐதீகம்

தீபாவளி அன்று பட்டாசு கொளுத்துவது ஐதீகம். பகவான் அசுரனை பலவித அஸ்திர சக்கரங்களைக் கொண்டு தாக்கியதால் ஏற்பட்டது. உதாரணமாக குழந்தைகள் விஷ்ணு சக்கரம் கொளுத்தி மகிழ்வார்கள்.

### நரகாசுரன் இறந்த தினம் தீபாவளி

உலகத்துக்குத் துன்பம் அளித்த இராவணன், கம்ஸன், சிசுபாலன், துரியோதனன் போன்றவர்கள் பிறந்த தினத்தையோ, இறந்த தினத்தையோ யாரும் நினைவு கொள்வதில்லை, கொண்டாடுவதில்லை. பூமாதேவியின் மகன் நரகாசுரன் தன் மகனின் மூலமாக மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. அந்தத் துன்பம் மனித சமுதாயத்திற்கு இனி வர வேண்டாம் என்ற எண்ணத்துடன் ஸ்ரீ கண்ணபிரானிடம் வரம் கேட்டு அதன் மூலம் தீபாவளி நன்நாள் தோன்றியதாக எமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. தாயின் அன்புள்ளத்தின் பிரார்த்தனையால் மகனின் நினைவு தினம் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. பூமாதேவியின் பிரார்த்தனையே, மகனின் பாசமே, மக்கள் மீதான அன்பே, ஒருவரும் துன்பப்படக் கூடாது என்ற இரக்கமே பூமாதேவியின் மகனின் பெயரிலே தீபாவளித் திருநாள் ஆயிற்று.






# இருள் அகன்று ஒளிவீசட்டும்

தமிழர் பண்டிகைகளில் பிரதான வகிபாகம் வகிக்கும் ஓர் பண்டிகையாக தீபாவளி காணப்படுகிறது. அன்பினையும் பண்பினையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் மனமலர்வையும் தருவதாக அல்லது வெளிப்படுத்துவதாக தீபத்திருநாள் காணப்படுகிறது.

நமது தேசத்தில் சாதாரண மக்கள் முதல் ஆட்சியில் உள்ளவர்கள் வரை அனைவரையும் சமமாக மதிக்கும் வகையில் மனநிலை மாற்றம் பெறவேண்டும் .

இவற்றை மனதில் வைத்து, ஒவ்வொருவரையும் சூழவுள்ள இருள் அகன்று மனதிலும் எண்ணத்திலும் செயலிலும் நல்லன நடைபெற திருவருளும் குருவருளும் ஒருசேர கிடைக்கவேண்டும் என இந்துக் குருமார் அமைப்பு சார்பில் அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் பகிர்கிறேன்.

**சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்**
இந்துக் குருமார் அமைப்பு



# புதிய எண்ணங்களுடன் விடிவு கிடைக்கட்டும்

தீபாவளியை இவ்வளவு காலமும் வழமையான ஒரு பண்டிகையாக கொண்டாடியதைப்போல இவ்வாண்டும் கொண்டாடுவதை விடுத்து சமுதாய மறுமலர்ச்சியைக் கருத்திற் கொண்டு அனுட்டிப்போம். உலகில் அறம் வென்று அதர்மம் தோற்றதை வாழும் மக்களுக்கு உணர்த்துவதற்காகவே இத்திருநாள் கொண்டாடப்படுகிறது. இடரின்றி வாழ்வதற்கு இறைபக்தியே அனைவருக்கும் தேவை. தீபாவளித் திருநாளில் விடிவு கேட்டு விளக்கேற்றிப் பரம்பொருளை வணங்குவோம். இயன்றவரை பிறருக்கு இடையூறின்றி வாழ முற்படுவோம். நாம் நன்மை செய்யத் தவறியதையிட்டு இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம். வீணான பழக்கங்களில் பொழுதைப் போக்காது சமுதாயத்திற்கு எழுச்சி தரும் காரியங்களில் ஈடுபடுவோம். ஏழை எளியவர்களுக்கு உதவுவோம். கருணையையும் காருண்யத்தையும் அரணாகக் கொண்டு எம் கடமைகளைச் செய்வோம். பகையை வளர்க்காமல் பிறரைப் பண்பினால் வெல்லுவோம். மூத்தோரை மதிப்போம்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 31

அச்சுவேலி மத்திய கல்லூரியின் இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முன்னாள் ஆசிரியர், அதிபர், மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் புண்ணியமூர்த்தி ஆகியோர் மண்டபத்தை திறந்து வைத்தனர். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், பழைய மாணவ ஓய்வு நிலைப் பொறியியலாளர் வை.சதானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-23)



# வளப்பற்றாக்குறையில் கோப்பாய் றோ.க.த.க.

## பெற்றோர் போராட்டம்
## ஆளுநர் நேரில் சென்று உறுதியளிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.31**

**யாழ்.கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிலவும் வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி பாடசாலை முன்பாக கடந்த திங்கட்கிழமை பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

நீண்டகாலமாகக் குறித்த பாடசாலை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிவரும் நிலையில் அதிகாரிகள் இதுதொடர்பாகக் கவனம் செலுத்தவில்லை. உரிய அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் நேற்றுப் புதன்கிழமை குறித்த பாடசாலையின் மாணவர்களின் பெற்றோரை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பாதிக்காத வகையில் ஏனைய செயற்பாடுகள் அமையும் என்றும் உறுதியளித்தார். (ச-66,26)





# மன்னாரில் பண்பாட்டு விழா

மன்னார், ஒக். 31

வட மாகாண பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களங்களின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து மாவட்ட கலாசார விழாவை மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தின.

மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட முன்னாள் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ், நானாட்டான் பிரதேச செயலாளர் கே.சிவசம்பு, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக ஆங்கிலத் துறை பேராசிரியர் ஜெயசீலன் ஞானராஜ், பொருளியல் பேராசிரியர் நேவில் மொறாயஸ், தாவரவியல் பேராசிரியர் சந்திரகாந்தா மகேந்திர நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 56)

# தங்கத்தை தனதாக்கிய வாழ்வக மாணவி!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். இராமநாதன் கல்லூரியின் வருடாந்த சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேச்சுப் போட்டியில் இரண்டு கண் பார்வையையும் முற்றாக இழந்த சுன்னாகம் வாழ்வக மாணவியான றெஜிறொபின்ஸ் விதுசா முதலிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை தனதாக்கியுள்ளார்.

இவர் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இதே போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 66)







# 10 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் கைது

மானிப்பாய் பொலிஸ் [illegible] யுக்குட்பட்ட ஆனைக்கோட்டை [illegible] கட்டைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய சந்தேகநபர் ஒருவர் 10 லீற்றர் கசிப்புடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஙி-27)

# 'கற்பகம்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தால் வெளியிடப்படும் கற்பகம் பத்திரிகையின் காலாண்டுக்கான இதழ்- 109 சங்கத் தலைவர் வ.சிவராசா தலைமையில் தெல்லிப்பழை ப.தெ.வ. அ. கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் சமாசத் தலைவர் செ. செல்வராசா, கோண்டாவில் சங்கக் கல்வி [illegible] சிவலிங்கம், சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்கள், [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45- 63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம், ஒக். 31

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுதொழில் அபிவிருத்திப்பிரிவு நடத்திய உள்ளூர் விற்பனைச் சந்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45- 27)

# விழிப்புணர்வு நடைபயணம்



யாழ்ப்பாணம், ஒக். 31

கந்தரோடையைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் 'இயற்கையினைப் பாதுகாப்போம்'எனும் தொனிப் பொருளில் இலங்கையைச் சுற்றி விழிப்புணர்வு நடைபயணத்தை முன்னெடுத்துள்ளனர். யாழ். பொன்னாலையிலிருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வு நடைபவனி 29 நாள்களில் 1400 கிலோமீற்றர் தூரம் பயணித்துக் கடந்த வியாழக்கிழமை மீண்டும் பொன்னாலையை வந்தடைந்தது. (ச-45-66)



# வாசிப்பு மாத நிகழ்வு

கொடிகாமம், ஒக். 31

பூநகரி பிரதேசசபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாத நிகழ்வு சபையின் செயலாளர் இ.தயாபரன் தலைமையில் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் 'பல்லவம்' இதழ் - 6 இனை செயலாளர் வெளியிட்டுவைக்க முழங்காவில் மகா வித்தியாலய உதவி அதிபர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி பெற்றுக்கொண்டார். (ச-45 159)



# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 31

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட உரும்பிராய் பொது நூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (ச-25)



# சின்னம் சூட்டும் நிகழ்வு..!

வவுனியா, ஒக். 31

வவுனியா மாவட்ட சாரணர் சங்கம் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சாரணத் தலைவர்களுக்கான கலைக்கூறு 1 பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த சாரணத் தலைவர்களுக்கான பயிற்சியும், சின்னம் சூட்டும் நிகழ்வும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் பயிற்சித்தலைவராக ப.அஜித்குமார், உதவி பயிற்சித் தலைவர்களாக ரா.வரதராஜா, அ.பிரியதர்சினி ஆகியோர் பங்குபற்றினர்.


நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா சாரண சங்கத்தின் செயலாளர் ஆர். வீரசிங்க, வவுனியா மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன், உதவி மாவட்ட ஆணையாளர்களான ஆர்.சந்திரமோகன், வி.பிரதீபன், எம்.சபேசன், எ.ஆருரன், ஆர்.சற்சொரூபன், பி.பிரதிகா ஆகியோர் பங்குபற்றினர். (ரி-18)



# புற்றுநோய் விழிப்புணர்வு

மன்னார், ஒக். 31

மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி, நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முருங்கன் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட பவனி நானாட்டான் சுற்று வட்டத்தின் வழியாக நானாட்டான் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. (ச-25, 213)




# மணப்பெண் அலங்காரத்தில் யாழ். பெண்மணி சாதனை

யாழ்ப்பாணம், ஒக். 31

கடந்த வெள்ளிக்கிழமை கம்போடியாவில் நடைபெற்ற ஏ.பி.எச்.சி.ஏ. கம்போடியா கெயார், மேக்கப் & பியூட்டி ஒலிம்பிக்ஸ் 2024 மணப்பெண் அலங்காரப் போட்டியில் யாழ். தெல்லிப்பழையைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். (ரி-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த

# உயர்தர மாணவர்களுக்கு ரூ. 2 இலட்சம் புலமைப்பரிசில்

**யாழ்ப்பாணம், ஒக். 31**

**யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா புலமைப் பரிசில்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

விண்ணப்பதாரிகள், ஜீவனோபாயமாக விவசாயத்தை மேற்கொள்ளும் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், பெற்றோரில் ஒருவராவது யாழ். மாவட்டத்திலுள்ள ஏதாவதொரு கமக்கார அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல்வேண்டும். 2022, 2023, 2024 ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து முறையே 2024, 2025, 2026 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருத்தல்வேண்டும்.

அதன் பிரகாரம், விண்ணப்பதாரிகள் தமக்குரிய கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, தங்களது பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபர் ஆகியோரின் சிபாரிசுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை 2024.11.22 ஆம் திகதிக்கு முன்பு உரிய உத்தியோகத்தரிடம் கமநலசேவைகள் நிலையத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்கலாம்.

க.பொ.த. சாதாரண தர விண்ணப்பதாரியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு மற்றும் குடும்ப வருமானம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு கமநல சேவைகள் நிலையப் பிரிவு மட்டத்தில் தெரிவு இடம்பெறும் என யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச-25)





கடந்த க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர்கள் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டனர். வித்தியாலய பழைய மாணவர்களான அமிர்தலிங்கம் ஞானசரஸ்வதி ஆகியோரினால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ச-25,9)

## கொடுக்குளாய்—இயக்கச்சி பாதை சீரமைப்புக்கு மூடல்

யாழ்ப்பாணம், ஒக்.31

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளியேற்றப் பாதை இரண்டு நாள்களுக்கு மூடப்படுவதால் மாற்று வழியைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகள் மற்றும் அரசியல்வாதிகள், அயல் கிராம மக்களின் உதவியுடன் 78 இலட்சம் ரூபா செலவில் போடப்பட்ட கொடுக்குளாய் - இயக்கச்சி அபாயவெளி பாதை தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், மருத்துவ நோயாளிகள் எனப் பலர் இந்தப் பாதையைப் பயன்படுத்துகின்றனர். இந்தப் பாதையைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு அரசியல்வாதிகள் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை.

இந்தநிலையில் கையிருப்பில் உள்ள சிறு நிதியைக் கொண்டு பள்ளங்களை கிரவல் மூலம் நிரவி சீரமைப்பதற்காக இரண்டு நாள்களுக்கு குறித்த அபாய வெளி பாதை முற்றுமுழுதாக மூடப்படுகின்றது என்று உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும், கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத் தலைவருமாகிய கணேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-27)





## நீரிழிவு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக்.31

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை பிரிவினரும், யாழ். நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து நடத்தும் நீரிழிவு விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ். நீரிழிவுக் கழகச் செயலாளர் க.கணபதி தலைமையில் யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

செயலமர்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யாழ். நீரிழிவுக் கழக அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி)

## திட்டமுன்மொழிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ். மாநகரசபை எல்லைப் பரப்பின் வீதி வலையமைப்பு மற்றும் வடிகால் அமைப்பின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைக்கு முவை நியமித்தல் தொடர்பான திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் சட்டச்சிக்கல்கள் குறித்து ஆலோசனை வழங்க பொறியியலாளர்கள், சட்ட வல்லுநர்கள், நகரத்திட்டமிடல் அதிகாரிகள், கட்டடக்கலைஞர்கள், நலன்விரும்பிகளின் ஆதரவுடன் திட்டமுன்மொழிவினை தயாரிப்பதற்கான கூட்டம் யாழ். மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2275 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-45)

## தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தினவிழா



கொடிகாமம், ஒக். 31

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பி.ப 2மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அ.நித்திலவர்ணன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்களான சு.கிருஸ்ணகுமார், சு.சுந்தரசிவம் மற்றும் த.கிருபாகரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-59)

## நடைபாதை வியாபாரிகளுக்கு தனியான இடம்

யாழ்ப்பாணம், ஒக்.31

தீபாவளியை முன்னிட்டு யாழ். முற்றவெளிப் பகுதியில் நடைபாதை வியாபாரிகளுக்கென தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கு தெற்கிலிருந்து வருகை தரும் நடைபாதை வியாபாரிகள் உடுபுடவை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். (ரி-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டு வரிசை மாற்றம் இல்லை!

## அரசு அலட்சியம்; வவு. மக்கள் வேதனை

**கொழும்பு, ஒக்.31**

**வவுனியா நகர்பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள காரியாலயத்தில் தொடர்ந்தும் கடவுச்சீட்டுகளைப் பெற வரிசைகளில் நிற்கவேண்டிய நிலை நீடித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

25 தொடக்கம் 20 நபர்களுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுக்காக நாள் ஒன்றுக்கு சுமார் 700 தொடக்கம் 1000 பேர் வரையில் இரவு - பகலாக வரிசைகளில் நிற்கவேண்டிய அவல நிலை நீடிக்கின்றது. அரசாங்கம் அண்மையில் கடவுச்சீட்டுகளை பெறுவதில் உள்ள தாமதங்கள் நீக்கப்படும் என அறிவித்திருந்த போதிலும் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. வயோதிபர்கள் தொடக்கம் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுகுழந்தைகளுடனான பெற்றோர் என இரவு, பகல்பாராது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீதி முழுவதும் வரிசையில் எந்த ஒரு அடிப்படை வசதியுமின்றி நிற்கின்றார் கள் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-இ)



## பட்டக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.31

'சிறுவர் உலகின் நிறங்களாலான நீலவானம்' எனும் தொனிப்பொருளில் பட்டக் கண்காட்சி நிகழ்வு அதிபர் ஹரிஹறரன் தலைமையில் நெடுந்தீவு மாவிலித்துறை அ.த.க. பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையிலும் நெடுந்தீவு பிரதேசசெயலகத்தின் ஒழுங்குபடுத்தலிலும் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேசசெயலர் திருமதி நிவேதிகா கேதீசன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதேசசெயலக கலாசாரஅபிவிருத்தி உத்தியோகத்தரால், பட்டம் கட்டுதல் தொடர்பாக மாணவர்களுக்கு முழுமையான அறிவூட்டலும் பயிற்சியும் வழங்கப்பட்டது. (ச-25,9)



## மலேசியா பயணமாகும் யாழ்.பல்கலைக்கழக அணி

யாழ்ப்பாணம், ஒக்.31

மலேசிய திரங்கானு பல்கலைக்கழகத்தால் அனைத்துலகத் தமிழ் இளையோர் மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட அனைத்துலக வானரங்கச் சொற்போரில் இலங்கையிலிருந்து தகுதிச் சுற்றில் பங்குபற்றிய 12 விவாத அணிகளுடன் போட்டியிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட 'அறிவியல் தமிழ்' எனும் அணி இலங்கையிலிருந்து இரண்டு சிறந்த அணிகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது.

குறித்த அணியினர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் மலேசியாவில் இடம்பெறவுள்ள விவாதப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஏனைய நாடுகளுடன் போட்டியிடவுள்ளனர். இந்த அணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களான மோகனராஜ் ஹரிகரன், சிவகுமார் திசான், ஜூலியற் கலைச்செல்வன் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (ச-45-66)

## அப்துல் கலாம் நினைவாக போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ். பொதுசன நூலகம் இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையுடன் கலாநிதி ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் நினைவாக போட்டிகளை நடத்தவுள்ளது.

தரம்-3 தொடக்கம் 5 வரையான கீழ்ப்பிரிவில் அப்துல்கலாமின் தோற்றம் பற்றிய வினோத உடைப் போட்டியும், அப்துல்கலாம் பற்றிய 2 நிமிடப் பேச்சுப்போட்டியும், தரம் - 6 தொடக்கம் 9 வரையான மத்திய பிரிவில் அப்துல்கலாம் உருவப் படத்தை வரையும் ஓவியப் போட்டியும் (ஏ-3 அளவுள்ள தாள்), அப்துல்கலாமின் வரலாறு பற்றிய கட்டுரைப் போட்டியும் (350 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்), தரம் - 10 தொடக்கம் 12 வரையான மேற்பிரிவில் அப்துல்கலாமின் சிந்தனைகள் பற்றிய சுவரொட்டி, அப்துல்கலாமின் சிந்தனைகள் பற்றி எழுதும் சிறுகதைப் போட்டியும் (500 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்) நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் யாழ். பொதுசன நூலகத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்வுள்ளதால் தங்களுடைய பதிவுகளை யாழ். பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதியில் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு யாழ். பொதுசன நூலக பிரதம நூலகர் தெரிவித்துள்ளார். (ச-45)

## மாகாண மட்ட பரதநாட்டியம் சாவகச்சேரி இந்து சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.31

அகில இலங்கை பரதநாட்டியப் போட்டித் தெரிவுக்கான மாகாண மட்டப் போட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் யாழ். கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை முதலாம் இடம்பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ச-25, 159,)



## விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.31

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையம், 2025 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், நாடகம், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்களுக்கான பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது. இதற்கான வளவாளர்களை நியமிக்கும் பொருட்டு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரங்கள், தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியன அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 11.11.2024 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தென்மராட்சி, குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன் கேட்டுக் கொண்டுள்ளார். மேலதிக தகவல்களுக்கு 0776696019 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (ச-25)

## சட்டவிரோத மணலகழ்வு 4 டிப்பர்கள் பறிமுதல்

கிளிநொச்சி, ஒக்.31

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணித்த நான்கு டிப்பர்கள் பறிமுதல் செய்யப்பட்டுளளன.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவை மடக்கிப் பிடிக்கப்பட்டன.

இதன்போது கைதுசெய்யப்பட்ட டிப்பர் சாரதிகளையும் சான்றுப் பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (ரி -113)

## சொற்பொழிவு

யாழ்பபாணம், ஒக்.31

சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த கேதார கௌரி உற்சவ காலச் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 11.30 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் "கேதார கௌரி விரத மகிமை" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்
# அவசரம் வேண்டாம்
## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட்டே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதுவிடயத்தில் யார் அவசரப்பட்டாலும் அரசாங்கம் அவசரப்படமாட்டாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை இலக்கு வைத்தே கம்மன்பில செயற்படுகின்றார். அரசாங்கம் என்ற வகையில் நாம் முழுமையான விசாரணை களை செய்வோம். அதன் பின்னரே விடயங்களைக் குறிப்பிட முடியும். என்றும் அவர் குறிப்பிட்டார்.
(ச-44)



# மக்கள் நம்பிக்கையை சிதைக்கிறார் அநுர
## சஜித் பளார்

கொழும்பு, ஒக்.31
ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்கு அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நடைபெற வில்லை என ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில்நாட்டுமக்களுக்குப்பலவாக்குறுதிகளை வழங்கியிருந்தார். வரிச்சுமை குறையும் என நாடு காத்திருந்தது.

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைக்குப்பின், வரிகுறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எவையும் நடக்கவில்லை. வற் உள்ளிட்ட நேரடிமற்றும்மறைமுகவரிகளைக்குறைக்கமுடியாது போயுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்த மீளாய்வு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், வரிச்சுமையைக் குறைக்கப்பட வேண்டுமாயின், கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
(ச-இ)

# 3 வருடங்களில் டிஜிற்றல் மயம்!
## ரணில் பாணியில் அநுர

கொழும்பு, ஒக்.31
எதிர்வரும் மூன்று வருடங்களில் முழு நாட்டையும் டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி அதற்கு இணையாக நாட்டு மக்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஏற்றுமதி துறையை பலப்படுத்தல் மற்றும் சர்வதேச புதிய சந்தை வாய்ப்புகளை தேடிக்கொள்வது தூதரக சேவையின் முக்கியமான பணி என்ற வகையில் அதற்கான இயலுமையைகளை கொண்டிருக்கும் திறமையானவர்களை தூதரக சேவைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
(ச-இ)

# மின்சாரக்கட்டணத்தை 30 வீதம் குறைக்கலாம்

கொழும்பு, ஒக்.31
இந்த வருடமும் கடந்த வருடமும் மின்சாரசபை பெற்ற இலாபத்தின் படி 30% மின்சார கட்டணத்தைக் குறைக்கமுடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முட்டை, அரிசி, தேங்காய் ஆகியவற்றின் விலையை அரசால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் நீர் மின் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் கடந்த காலங்களில் மின்சாரசபை பெற்ற இலாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை 30% குறைத்து நிவாரணம் வழங்கமுடியும். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலமோ அல்லது மூன்றில் இரண்டு பங்கு அதி காரமோ தேவையில்லை. அதற்கு மின்சாரசபை சரியான கணக்கீடுகளைச் செய்த பிறகு பொதுப் பயன்பாட்டு ஆணையம் முன்மொழிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
(ச-இ)

# நடப்பது குரோத அரசியலே



கொழும்பு, ஒக்.31
குரோத அரசியலே தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. குரோத அரசியலின் பயணத்துக்கு நீடித்த ஆயுள் கிடையாது என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

உண்மை நிச்சயம் வெல்லும். நீதிமன்றம் ஊடாக அது நடக்கும் என நம்புகின்றேன். நான் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றேன். பின்வாங்கவில்லை. 2015 இலும் குரோத அரசியலே முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.
(ச-44)


சிவமயம்
45ம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 17.09.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப வாரிசு
அமரர் தயாசீலன் வைஸ்ணவன்
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 29.10.2024 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
தம்பு ஒழுங்கை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்



செல்வி ஜோசெப் செல்வராணி
சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜோசெப் செல்வராணி நேற்று (30.10.2024) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற ஜோசெப்-பரிமளம் தம்பதியினரின் அன்பு மகளும், ஜோசெப் தர்மராஜா காலஞ்சென்ற ஜோசெப்-அருளானந்தம் (ஜெயம்) காலஞ்சென்ற மேரி நற்குணம் மற்றும் ஜோசெப் செல்வம் (France), அரியமலர், கமலாதேவி (France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் சாரதாதேவி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் ரதி, ரகுபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (31.10.2024) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் இல.117 பழைய பூங்கா வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தகவல்:
குடும்பத்தினர்.
(CS 11751) P-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்.பல்கலையில் தமிழியல் நூலகம்



சிங்கப்பூர் எஸ்டேட்
கந்தையா கார்த்திகேசன்

ஈழத் தமிழர் வாழ்வியலின் மரபுவழிப் பண்புகள் பலவற்றையும் உள்வாங்கிய உணர்வோடு உயர்கல்விப் பணியாற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் உயர் கல்வி வரலாற்றின் உன்னதமானதொரு மைல்கல் 1974.10.06 அன்று ஆரம்பிக்கப்பட்டது யாழ்ப்பாண வளாகம்.

இந்தப் பொன்விழா ஆண்டில் தமிழியல் சார்ந்த ஆராய்ச்சிக்கு வலுவூட்டும் செயற்பாடுகளுள் ஒன்றாக 'தமிழியல் நூலகம்' இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படக் கூடிய தமிழியல் சார்ந்த தொகுப்புகளைச் சேகரித்துப் பாதுகாக்கவேண்டும், தமிழியல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி முதலான அறிவுசார் செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலமைந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்பது சிங்கப்பூரில் வாழ்ந்து மறைந்த நன்கொடைச் செம்மலான கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களுள் ஒன்றாக இருந்தது. இது தொடர்பில் கந்தையா கார்த்திகேசன் 1975ஆம் ஆண்டு தைமாதம் ஆறாம் திகதி உயில் ஒன்றை எழுதி வைத்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியலும், இசையியலும் மேம்பாடு காண்பதற்கெனப் பெரும் தொகை அவரால் உவந்தளிக்கப்பட்டிருந்தது.

## ஆரம்பப் பணிகள்

ஆரம்பத்தில் தமிழ்த்துறைக்கென ஒரு நூலகத்தை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்கப்பட்ட போதும், பின்னர் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தனியானதொரு அமைவிடத்தில் 'தமிழியல் நூலகம்' என்னும் பெயருடன் ஒரு நூலகத்தை நிறுவுவதற்கான செயற்றிட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டில் இருந்து இந்த முயற்சிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுத்தபோதிலும், ஏறத்தாழ 15 ஆண்டுகளின் பின்னர் 2021ஆம் ஆண்டிலேயே தமிழியல் நூலகத்தை நிறுவும் முயற்சி சாத்தியமாகியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி நடந்த 454ஆவது பேரவைக் கூட்டத்தில் தமிழியல் நூலகத்தை நிறுவுவதற்கான அனுமதியும், தேவையான நிதி ஒதுக்கீடும் கிடைத்தன. கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினதும், துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவின் பெருமுயற்சி மற்றும் வழிகாட்டுதலிலும் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலையை முன்னெடுப்பதற்காக நூலகப் பணியாட் தொகுதியினரை உள்ளடக்கியதான செயற்றிட்டக் குழுவினர் நியமிக்கப்பட்டனர்.

நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களில் ஒன்றான தமிழியல் நூலகம் அமைக்கும் விருப்பம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளின் பின்னர் இப்போது நிறைவேறுகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

## தமிழியல் நூலகத்தின் சிறப்பம்சங்கள்

❋ *பொது மக்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்குதல்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் மாத்திரமல்லாமல், அதற்கும் அப்பாற்சென்று பொதுசனங்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்கும் நோக்கோடு ஒரு விரிந்த சேவைத் தளத்தில் தமிழியல் நூலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பாலபண்டித மாணவர்கள், தமிழ்ப் பண்டித மாணவர்கள், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், வெளிநிலை ஆராய்ச்சியாளர்கள் என்றவாறு விசாலமான வாசகர் குழுமம் தமிழியல் நூலகத்தின் பயனாளிகளாக வரவேற்கப்படுவர்.

❋ *இலங்கைத் தமிழியல் வெளியீடுகளுக்கான சேகரிப்பு நிலையம்*

இந்த நூலகம் இலங்கைவாழ் தமிழர் தம் வெளியீடுகளின் அனைத்து அம்சங்களையும் சேகரித்துப் பாதுகாத்துப் பாவனைக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றது. இலங்கைத் தமிழர் தம் மரபுரிமை சார்ந்த ஆக்கங்களைத் தேடித் தொகுப்பதில் தீவிர செயற்பாட்டுடன் தொடர்ந்து பணியாற்றத் திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கருவூலம் என்றதொரு கருத்துருவாக்கத்தின் கீழ் இந்தப் பிரதேசத்துக்கு உரிய தனித்துவமான வெளியீடுகள் யாவற்றையும் வடித்தெடுத்துப் பாதுகாக்கும் சிறப்புச் செயற்பாடொன்றும் தமிழியல் நூலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்தின் உள்ளேயே ஒரு தனியான பகுதியில் இவ்வகை நூல்கள் சேகரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திறப்புவிழாக் காணும் இந்தநாளில் ஏறத்தாழ ஆயிரம் எண்ணிக்கையிலான அரியநூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

❋ *ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் வரலாற்றினை இயம்பும் எண்ணிமத் தளம்*

தமிழ் வளர்த்த ஈழத்துச் சான்றோர்களின் உருவப் படங்கள் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ ஆயிரத்து தொண்ணூறுகளில் இருந்து தமிழியலைத் தமது வாழ்வியலாகக் கொண்டு எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த ஈழத்துத் தமிழ்ச் சான்றோரை நினைவுகூர்ந்து, இளந்தலைமுறையினர்க்கு அச் சான்றோர்களை அறிமுகஞ்செய்து வைப்பது இந்தச் செயற்பாட்டின் நோக்கமாக உள்ளது.

தமிழியல் கருவூலம் என்ற எண்ணிமத் தளத்தினூடாக தமிழ்ச் சான்றோரின் வாழ்வியலையும், படைப்புகளையும் சேகரித்துப் பாதுகாத்து இணையவழித் தகவற் பர[illegible] ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❋ *பண்டிதர் வகுப்புகள்*

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் பண்டிதர் கற்கை நெறிகளைப் பன்னெடுங்காலமாக நடத்தி வந்தது. பின்னர் இச் சங்கம் நலிவுற்றதைத் தொடர்ந்து, ஈழத் தமிழர் தம் பாரம்பரியக் கல்விமுறையும் முடிவு நிலை நோக்கிச் செல்வதாயிற்று. இந்நிலையில், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் எழுத்து நிலை ஒப்புதலோடு, பண்டிதர் கற்கையைத் தமிழியல் நூலகம் தனது செயற்பாடுகளுள் ஒன்றாக முன்னெடுத்து வருகின்றது. ஒவ்வொரு அணியிலும் ஐம்பது மாணவர்களுக்கு கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் புலமைப் பரிசில் அடிப்படையில் இக்கற்கை நெறியைத் தொடர்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் கல்வியின் ஆழமான கற்றலுக்கு இது வழிவகுக்கும்.

❋ *தமிழியல் ஆய்வுகளுக்கான வளநிலையம்*

தமிழியல் என்பது தமிழ்மொழி, பண்பாடு, அறிவியல் முதலான அனைத்தையும் உள்ளீர்த்ததொரு செல்நெறி. இதற்கானதொரு உசாத்துணை நிலையமாகத் தமிழியல் நூலகம் செயற்படும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வுத் துணைக்கருவி நூல்களை உருவாக்கி வழங்குவதும் தமிழியல் நூலகத்தின் இன்னொரு செயற்பாடாகும். ஈழத்துத் தமிழ் மரபில் வெளியாகிய காலத்தால் முற்பட்ட 'வித்தகம்', 'ஞாயிறு', 'ஈழகேசரி' ,'சிந்தனை' போன்ற வெளியீடுகளை இனங்கண்டு அவற்றின் உள்ளடக்கத்தை வெளிக் கொணரும் வகையில் சொல்லடைவுகளைத் தயாரித்தல், மீள்பதிப்புச் செய்தல், தகவலைத் தெரிவு செய்து வாசகருக்கு வழங்குதல் முதலான ஆராய்ச்சியுதவிச் சேவைகளும் தமிழியல் நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

❋ *சேவை வழங்குதல்*

ஆரோக்கியமான கற்றற் சூழல், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான இணைய வசதியுடனான கணினிக்கூடம், வார இறுதி நாள்கள் மற்றும் விடுமுறை நாள்களிலும் தமிழியல் நூலகத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் என்றவாறு இந்நூலகம் ஒக்ரோபர் 29 ஆம் திகதி இன்று முதல் இயங்க ஆரம்பிக்கிறது.

இந்நூலகம் ஒரு உசாத்துணை நூலகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலிலே தொடர்ந்து பணியாற்றுவதைத் திடசங்கற்பமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் புதியதொரு பரிமாணத்தைத் தோற்றிவிக்கின்றது.

"எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி வலயத்தில்

# மீளளிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்ய ஏற்பாடு



## வடக்கு ஆளுநர் ஆராய்வு

**கொழும்பு, ஒக். 31**

**பலாலி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டு அண்மையில் விவசாய நடவடிக்கைகாக விடுவிக்கப்பட்ட காணிகளில் பொதுமக்கள் விவசாயத்தில் ஈடுபடக்கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து வடக்கு மாகாண ஆளுநர் கவனம் செலுத்தியுள்ளார்.**

இதுகுறித்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். பதில் மாவட்ட செயலர், உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், வலி.வடக்கு பிரதேசசபையின் செயலாளர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராணுவ உயர் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது விடுவிக்கப்பட்ட விவசாய காணிகளுக்கு செல்லும் பாதைகள் பற்றைக்காடாகக் காணப்படுகின்றமையால் காணிகளுக்கான பாதைகள் பிரதேசசபையால் துப்புரவு செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் பின்பு பொதுமக்களின் காணிகள் மாவட்ட செயலகத்தால் துப்புரவு செய்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மீளளிக்கப்படுகின்ற விவசாய காணிகளுக்குள் மக்கள் சென்று விவசாயத்தில் ஈடுபடக்கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் மின்சார வசதிகளை பெற்றுக் கொடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது. (ச-26)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை மின்சாரசபையின் 55ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தால் இரத்ததான நிகழ்வு யாழ். பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடத்தப்படவுள்ளது.

நிகழ்வில் இலங்கை மின்சார சபையின் வடமாகாண உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-45)

## முதலுதவி பற்றி மீனவர்கள் தெரிந்திருக்க வேண்டும்

### ஜென்சன் றொனால்ட் தெரிவிப்பு!

கிளிநொச்சி, ஒக். 31

மீனவர்களின் வாழ்க்கை தினந்தினம் கடலோடு போராடுவது அங்கு ஏற்படக்கூடிய உயிராபத்துக்களைத் தடுக்க கடற்பயணங்களில் ஈடுபடும் மீனவர்கள் கட்டாயம் முதலுதவி பற்றி அறிந்திருக்கவேண்டும் என பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார். கடற்றொழிலாளர்களுக்கான முதலுதவிச் செயலமர்வில் வளவாளராகக் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடலுக்குச் செல்லும்போது படகில் போதிய எண்ணை, சுத்தமான போதிய குடிநீர், உணவு என்பவற்றுடன் உயிர்காப்புக் கவசத்தையும் அணிந்துசெல்ல வேண்டும். கடலில் காற்றின்வேகம், அலையின் உயரம் என்பன ஆபத்தானவையாக எந்த வேளையும் மாறலாம். நீச்சல் நன்கு தெரிந்து வைத்திருப்பது மிகவும் நல்லது.

வலிப்பு,இதய மற்றும் இழுப்பு நோயுடையவர்கள் அவதானமாக இருப்பதோடு தமக்கான மருந்துகளையும் எடுத்துச்செல்ல வேண்டும். மேலும் ஆபத்தான வேளைகளில் நீரில் மூழ்கிய வரைக் காப்பாற்ற கயிறு, பலமான தடி, மிதவைகள் ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பதோடு, சமிக்ஞைகளை வழங்க மின்சூழ், சிவப்புக்கொடி, புகையை வெளிவிடக்கூடிய உபகரணங்கள், முதலுதவிப் பெட்டி, திசைகாட்டி மற்றும் செல்லிடத் தொலைபேசிகளையும் எடுத்துச் செல்லவேண்டும். நீரில் மூழ்கியவருக்கு சுவாசவழி அடைப்பை நீக்கி மீளுயிர்ப்பு நிலையில் வைத்திருக்கத் தெரிந்திருக்க வேண்டும். உடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய இழுது மீன், நச்சுநீர் குறித்து எச்சரிக்கையோடு செயற்படுவதோடு பாதிப்பு தீவிரமடைய முன்பே மருந்துவமனையை நாடவேண்டும் - என்றார். (ரி-9)



## மாவீரர்களின் தியாகங்களை வீண்போகச் செய்ய விடமாட்டோம்


### முன்னாள் போராளியும் வேட்பாளருமான சி.வேந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

களமுனையில் போராடி மண்ணிலே உறங்கும் ஒவ்வொரு இளைஞர்களின் கனவையும் தியாகங்களையும் வீண்போக விடமாட்டோம். தாயக நிலப்பரப்பிலே மக்களின் நிம்மதியையும் சுதந் திரத்தையும் உறுதிசெய்யப் போராடுவோம்.

-இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளரும் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவருமான போராளி சி.வேந்தன் தெரிவித்தார். வட்டுக்கோட்டை மூளாய் பகுதியில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

போராளிகள் கடைசி வரையிலும் மக்களின் நலனிலும் தாயகத்தின் மீட்சியி லும் மாத்திரமே அக்கறை கொண்டவர்கள். மாவீரர்களின் தியாகங்களை வீண்போக விடமாட்டோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தகுந்த தீர்வை பெற்றுத்தர போராளிகளால் மாத்திரமே முடியும். அபிவிருத்தியுடன் கூடிய சரியான தாயக சுய நிர்ணயமே எமது இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-26)







## விற்பனைக் கண்காட்சி

கிளிநொச்சி, ஒக். 31

தீபாவளி தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தின் சௌபாக்கியா உற்பத்திக் கிராம சுயதொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனைக் கண்காட்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விற்பனைக் கண்காட்சியை திறந்து வைத்தார். (ச-25, 113)



தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. விழாவில் ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-25, 9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்புணர்வுக்கு ஆளாக ஆடைதான் காரணமா?

கணேஸ்குமார் மதியந்தி
ஊடக கற்கைகள் துறை
மூன்றாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்

**பெண் பூ போன்றவள் என்று கூறி அவளை கசக்கி எறியும் நிலை மாறி பூவை பறித்தால் அதிலுள்ள முட்கள் குத்தும் என்ற பயத்தினை உருவாக்க எண்ணுகின்றோம்.**

பொமுதாகிப்போச்சு இப்ப எங்க தனியா வெளியால போற ? இது என்ன உடுப்பு? இவ்வாறான பல கேள்விகள் இன்றும் பெண்களை நோக்கி கேட்கப் பட்ட வண்ணம் இருக்கின்றன. காலத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. ஆனாலும் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரித் துக் கொண்டே இருக்கின்றன. பாடசாலையிலோ, வீடுகளிலோ, வேலை செய்யும் தளங்களிலோ ஒரு பெண்ணுக்கு இடம்பெறுகின்ற உடல், உள ரீதியான வன்முறையாக இருக்கட்டும், மனைவியாக இருந் தாலும் அவளது அனுமதி இன்றி உறவு கொள்ள முயல்கின்ற ஆணாதிக்கமாக இருக்கட்டும் அவை பற்றிய விவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக் கும் நாகரீகம் அடைந்த சமூகத்தில் நாள்தோறும் எமது செவியை வந்தடையும் பாலியல் வன்மு றையோடு தொடர்புடைய கொலைச்சம்பவங்கள் எல்லாம், எப்படி சமூகத்தில் வாழப் போகின்றோம் என்ற பயத்தினை ஒவ்வொரு நொடியும் உரு வாக்கிக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை. பாலியல் வன்முறை வரிசையில் துஷ்பிரயோகம், மானபங்கப்படுத்துதல், அமில தாக்குதல்கள் என்பன இன்றும் இடம் பெறுகின்றன. இன்று பெண்கள் இது தொடர்பாக பேச முன்வருவதனால் ஊடகங்களில் செய்தியாக வெளிவருகின்றன. ஆரம்ப காலங்களில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்தற்கு? என்ற நிலையிலிருந்தவர்கள் ஓரளவா வது விடுபட்டு கல்வியிலும் தொழிலிலும் முன்னே றுவதற்கான பரப்பு விரிவடைந்துள்ளது. இன்று ஒரு பெண் வீட்டிலிருந்து வெளியேறி வெளியில் பயணிக்கையில் அறிமுகம் இல்லாத பலரை சந் திக்கி வேண்டியுள்ளது. அவள் வெளியில் சென்று மீண்டும் வீடு திரும்பும் வரை பலவிதமான உடல் ரீதியான, உளரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. இதில் பாடசாலை படிப்பை முடித்துவிட்டு பல்கலைக்கழக பட்ட படிப்பிற்காக வெளி மாவட்டங்களிலிருந்து வந்து விடுதிகளில் தங்கி இருக்கும் பெண்கள் அதிக பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியுள்ளது . என் னுடைய 24 வயதை உடைய நண்பி ஒருவர் இது தொடர்பாக குறிப்பிடுகையில், "பல்கலைக்கழகத் திற்கு பேருந்தில் பயணிக்க முடியவில்லை. கூட்ட நெரிசலில் சில கைகள் என்னுடைய உடம்பை தட்டி செல்கின்றன. ஆனால் நான் பேருந்தில் தான் பயணிக்க வேண்டி உள்ளது என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே" என்றார். பேருந்தில் பயணிக்கவும் முடியாமல் சில கைகளின் சீண்ட லில் இருந்து விடுபடவும் முடியாமல் காணப்படும் அவளுடைய மனநிலை கல்வி வாழ்க்கையையே பாதிப்பதாக அமைகிறது. எனது நண்பி மட்டுமல்ல விடுதியில் தங்கியிருக்கும் பல பெண்களும் இந்த பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதனை உறுதியாக கூற முடியும்.



பாலியல் வன்முறை என்பது உடல் ரீதியாக மட்டும் ஏற்படுவது அல்ல. நானும் பல்கலைக்கழகத்திற்கு சென்று விடுதிக்கு திரும்பும் வரை கடந்து செல் லும் ரயில் பாதைகளிலும், தெரு ஓரங் களிலும் கடைகளிலும் இருந்து சில குரல்கள் இரட்டை அர்த்தத்தில் ஒலிப்பதை கேட்க வேண்டியுள்ளது. (அதாவது தவறான சொற்பிர யோகங்கள்) நான் அவ்விடத்தை விட்டு கடந்தா லும் அந்த வார்த்தைகள் என்னுடைய உள்ளத்தை பாதிக்கவே செய்கின்றன. இதில் பல்கலைக்கழக சகோதரர்களும் விதிவிலக்கல்ல. பெண் என் றாலே அவளை கவர்ச்சிப் பொருளாக தான் பார்க்க வேண்டும் என்ற நியமத்தினை வகுத்து வைத்துள் ளனர் போலும்.

இப்படியான பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்ட பெண்கள் தாங்களும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று தமது அனுபவத்தை சமூக வலைத்தளங் களின் ஊடாக பகிர்ந்து மீ ரூ என்ற (#) சதுர குறியீட்டினை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வர்களுக்கு எதிராக பயன்படுத்தி வருகின்றனர். நடிகை அலைசா மிலானோவா, ஊடகவியலா ளர்கள் சாலா கெலப்பத்த, கவிந்யா தென்ன கோன்; என எல்லா நிலையிலுள்ள பெண்களும் பாலியல் வன்முறைக்கு முகம் கொடுத்துதான் வந்துள்ளார்கள். ஆனாலும் பாலியல் வன்முறை நிகழ்த்தப்படுகின்ற ஒரு சில சந்தர்ப்பங்களில் பாதிக் கப்பட்ட பெண்ணை பார்த்து அவளுடைய ஆடை சரியில்லை, சென்ற நேரம் சரியில்லை, இடம் சரியில்லை என அவள் மீது இந்தச் சமூகம் குற் றம் சாட்டுகின்றது. இங்கு அவளுடைய ஆடை சரி இல்லை என்றால், மன்னாரில் இடம்பெற்ற பத்து வயதுச் சிறுமி ஸ்ரேயாவுக்கும், பம்பஸ் உடுத்திய பெண் குழந்தைகளுக்கும் நடைபெறுகின்ற வன் முறைக்கு அவர்களது ஆடையா காரணம். தற் பொழுது இந்தியாவையே உலுக்கிக் கொண்டுள்ள டாக்டர் மௌமிதாவின் பாலி யல் வன்முறைக்கு அவருடைய ஆடையா காரணம்? நான் பாட சாலை கல்வி கற்கும் காலத்தில் பாதையில் சென்றுகொண்டிருந்த என்னுடைய தங்கை ஒருத்தியை ஒரு கை அவளின் பின்புறமாக தட்டி விட்டுச் செல்கின்றது இதற்கு அவளுடைய ஆடைதான் கார ணமா? கடந்த சில நாட்களுக்கு முதல் நான் பேருந்திற்காக காத்தி ருந்த பொழுது எட்டு வயதுச் சிறுமி அவளது தாயிடம் "அம்மா நான் ஸ்கூல்ல உட்கார்ந்து இருக்கும் போது சேர் என்னை பேட் டச் செஞ்சாரு" என்றாள். ஆடைதான் காரணம் என்றால் கள்ளக் கபட மற்ற அந்த சிறு குழந்தைகள் ஏன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக் கப்படுகின்றார்கள்?

எம்முடைய சமூகத்தில் காலம் கால மாக ஒரு நியமம் உள்ளது. ஏதா வது ஒரு சம்பவம் இடம்பெற்றால் மக்கள் கொந்தளித்து தங்களு டைய எதிர்ப்பை உணர்ச்சி பூர்வ மாக மிகப்பெரிய போராட்டங்க ளாக நடத்துவர். ஆனால் காலங் கள் பல கடந்ததும் அதனை அப்படியே மறந்து விடுவர். இது தான் வழக்கம். ஆனால் இதே சமூகம் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பெண் உயிரோடு இருந்தால், உடல் அளவில் பாதிக்கப்பட்ட அவளை மனதளவிலும் எழும்பவே விடா மல் செய்து விடுகிறது. ஆனால் குற்றம் செய்தவனோ வழமை போல சுதந்திரப் பறவையாக திரியஆரம்பித்து விடுவான். உண் மையில் அன்று தொடங்கி இன்று வரை அதிக காம உணர்வினை கொண்ட ஆண்கள் சிசுவில் தொடங்கி வயது போனவர்கள் வரை சீண்டி கொண்டு தான் இருக்கின்றார்கள். உலகம் எவ் வளவு தான் முன்னேறினாலும் பெண்களுடைய பயம் இந்த விடயத்தில் இன்னும் அதிகரித்துக் கொண்டு மட்டும் தான் செல்கின்றது. நாங்களும் தொழில்துறையிலும் கல்வித் துறையிலும் எவ்வள வுதான் முன்னேறினாலும் சில கைகளினுடைய சீண்டல்களுக்கு இன்னும் பயப்படவேண்டியதாக உள்ளது. பாதிக்கப்பட்டவர்களை புகார் அளிக்க முன் வந்தாலும் இந்தச் சமூகம் அவர்களை தவ றாக தான் பார்க்கின்றது. நாங்களும் எங்களுடைய கனவுகளை நோக்கி பறக்க ஆசைப்படுகின்றோம். சுதந்திரமாக எவ்வித பயமும் இல்லாமல் நடமாட நினைக்கின்றோம். பெண் பூ போன்றவள் என்று கூறி அவளை கசக்கி எறியும் நிலை மாறி பூவை பறித்தால் அதிலுள்ள முட்கள் குத்தும் என்ற பயத் தினை உருவாக்க எண்ணுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 31

'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தீபாவளித் திருநாளான இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் தீபாவளிச் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

(ம-66)


சிவமயம்

**பாண லிங்கேஸ்வரம்**

**அருள்மிகு நர்மதா நதீஸ்வரர்**

**சிவன்கோயில் ஒட்டாங்குளம், துணுக்காய்**

1. 36 அடி உயரமும் 6 சில்லுகளையும் கொண்ட சித்திரத்தேர் அமைப்பதற்கு
2. 60 அடி நீளமும் 40 அடி அகலமும் 10 அடி ஆழமும் கொண்ட தீர்த்தக்கேணி கட்டுவதற்கு
3. தேர்முட்டி அமைப்பதற்கு
4. கொடிமரம் - 31 அடி

**கூறுவிலை கோரப்படுகின்றது**

**10.11.2024 முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்**

**நெறிப்படுத்துனர் சிவஸ்ரீ கு. சுமுகலிங்கம் ஐயர்**

**நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் ஒட்டாங்குளம், துணுக்காய்.**

**முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.**

**தொடர்புகளுக்கு: 076 409 6121**

(cs.) (N-1)


## போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வைத்து போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர் களும் 26 மற்றும் 35 வயது உடைய வர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞர்களிடமி ருந்து 10 போதை மாத்திரைகள் மற்றும் 110 மில்லி கிராம் ஹெரோய்ன் என்பன மீட்கப்பட்டுள்ளன.

(ம-23,26)





யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினர் மேற்கொள்ளும் சமூ கசேவையின் ஒரு அங்கமாக உயர்தர உயிரியல் மற்றும் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்க ளுக்கான செயலமர்வு கிளிநொச்சி விவ சாய பீடத்தில் அண்மையில் நடைபெற் றது.

(ம-25,113)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2025

1. வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** : 2024.11.01 - 2024.11.18 நண்பகல் 12.00 மணி
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 2024.11.19 பி.ப.14.30 மணிவரை
   **கேள்வி திறக்கும் திகதி** : 2024.11.19 பி.ப.14.30 மணி

2. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்
3. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும் அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரத்தில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.14.00மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 2500.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 15,000.00 இனையும் பணமாக செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து "தலைவர். உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு. வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப் பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத் தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக் கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.
8. கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர் களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/01/IV/PC/25 | பாதுகாப்பு சேவை | 05 | 03 | 2025.01.01-2025.12.31 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**


## பெயர் மாற்றம்

கும்பலை அளவெட்டி கிழக்கில் வதியும் அப்புத்துரை கந்தையா ஆகிய நான் எனது பெயரை அப்புத்துரை புஷ்பநாதன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் அப்புத்துரை புஷ்பநாதன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

அப்புத்துரை புஷ்பநாதன்

(CS/56573) J-1

## வீடு வாடகைக்கு


சோமசுந்தரம் லேன் சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உத்தியோகத்தர்களுக்கு கிழமை/ மாதம்/ வருடத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

**077 384 9671**

(cs.56569) (N-1)


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1934



மறைவு 29 . 10 . 2024

**பாக்கியம் சண்முகம்**

சீனாப்புலம் வதிரியைப் பிறப்பிடமாகவும், வீரக்காரியம்புலம் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் சண்முகம் நேற்றுமுன்தினம் (29.10.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா செல்லையா, சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரன் (ஜேர்மனி), இந்திராணி (பிரான்ஸ்), பார்த்தீபன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி, மகேஸ்வரன், தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதூஷா, இந்துஷா, காலம்சென்ற நிதர்ஷன் மற்றும் நீரஷா, நிதர்ஷா, தர்ஷிகன், பாருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (31.10.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

(CR/43547) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஒரு தரப்பினர் சதித் திட்டம்!

## எஸ்.பி.திஸாநாயக்க குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக். 31**
**அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கின்றனர்.**

நாட்டு மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலேயே, ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஒருமாதம் போதாது என்றும் அரசாங்கத்தைக் கவிழ்க்க சிலர் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோத்தாபய முறையற்ற வகையில் செயற்பட்டதன் விளைவையே இன்று சிரேஷ்ட அரசியல்வாதிகள் எதிர்கொள்கின்றனர் என்ற உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளுக்கு தகுந்த பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் தோற்றுவிக்க வேண்டும் என்பதை நாட்டு மக்களிடம் வலியுறுத்துகிறேன். ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்த அவருடன் இணக்கமாக செயற்படக் கூடிய தரப்பினரை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். மாற்றுக் கொள்கைகளையுடைய தரப்பினரை தெரிவு செய்தால் முரண்பாடான நிர்வாக கட்டமைப்பே தோற்றம்பெறும் என்பதை மக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)


# அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்
## (ASR WEDDING HALL)

## முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

**எமது வாடிக்கையாளர்களுக்கு**
**தீபாவளி நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்**

உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவு திருமணங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், பாடசாலை நிகழ்வுகள், அரச மற்றும் நிறுவனங்களில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ள நாட வேண்டிய மண்டபம் **அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**

- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9.00 மணிமுதல் 4.30 மணிவரையும்
- சனி காலை 9.00 மணி தொடக்கம் 12.30 மணி வரைக்கும் மண்டபத்தை பார்வையிடலாம்.
- ஞாயிறு விடுமுறை

**இல.542, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
**தொலைபேசி எண்: 021 222 1355**

(cs.56455) (N-1)



# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 11.11.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 12.11.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK
PEOPLE'S BANK
Pride of the Nation


# மக்களை உசுப்பேற்றுவோரை நிராகரிக்கக் கோரிக்கை!

தமிழ் மக்களை உசுப்பேத்தி நாடாளுமன்றம் செல்கின்றார்கள். அவர்களால் இதுவரை எமக்கு என்ன கிடைத்தது என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் சுதர்சிங் விஜயகாந்த்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வேட்பாளர் பட்டியலில் பாட்டாளி சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் கடற்றொழில் சமூகத்தை சேர்ந்தவர்களையும் நியமித்திருப்பார்கள். ஆனாலும் அவர்களது வாக்குகளை திருடிக் கொண்டு நாடாளுமன்றம் சொல்லப்போவது என்னவோ மேட்டுக்குடியை சேர்ந்தவர்களே. இம்முறை பாட்டாளி மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் சமூகத்தில் இருந்து களமிறங்கியுள்ள ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையிலான ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணிக்கு மக்கள் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் - என்றார். (எ-20)


## வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

**பொதுச்சபை அங்கத்தவர்களை மீளாய்வு செய்தல்**

எமது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரை 2324 அங்கத்தவர்கள் பொதுச்சபை உறுப்பினர்களாக பதியப்பட்டுள்ளனர். இதில் ஐந்நூற்றுக்கும் குறைவான அங்கத்தவர்கள் மாத்திரம் தொடர்புகளில் உள்ளர்.

இதனால் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பும் போது சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்ப வேண்டி உள்ளது. அதனால் பாரிய செலவு சங்கத்திற்கு ஏற்படுவது மாத்திரமின்றி சங்க நடவடிக்கைகளுக்கும் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதனால் சென்ற 06.08.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளரின் அனுமதிபெற்று பொதுச்சபை அங்கத்தவர்களை மீளாய்வு செய்வதாக 10வது தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே எதிர்வரும் 01.11.2024 வெள்ளிக்கிழமையில் இருந்து 30.11.2024 சனிக்கிழமை வரையான ஒரு மாத காலப்பகுதிக்குள் எமது சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அலுவலக கடமை நேரங்களிலல் தங்களது அங்கத்துவ சந்தா 20 ரூபாவினை செலுத்தி விண்ணப்ப படிவங்களை பதிவு செய்யும்படி தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்துவ சந்தா ரூபா 20 செலுத்தி விண்ணப்பங்களை மீளாய்வு செய்தவர்களுக்கு மாத்திரம் எதிர்வரும் பொதுக்கூட்டங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கௌரவ செயலாளர்



## 50வது பிறந்தநாள் நினைவலைகள்



பிறப்பு 31 . 10 . 1974
இறப்பு 02 . 04 . 2021

**அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்**

நினைவினில் மலர்வாய் நிதமும்
அகத்தில் நித்தம் நித்தம் மலர்வாய்
எம் தேசம் மலர மழலைக்காய் மலர்ந்தாய்...
நிலையில்லா வாழ்வில் நிமிர் நிலையாம் கல்வியூட்டி...
வாய்மையே தனதாக்கி தற்புகழில்லா மாந்தராய்....
தரணி போற்ற எம் இதய கமலத்தில்
நீ நித்தம் நித்தம் மலர்வாய்.

இல: 42/6, சிவகுருநாதர் ஒழுங்கை,
[illegible]
யாழ்ப்பாணம்.

என்றும் ஆறாத் துயரில்
குடும்பத்தினர்

(CS/29203) J-1



## மணமகள் தேவை

1986 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் (P) குலத்தைச் சேர்ந்த தச்சு நிறுவன முதலாளிக்கு வரன் தேடப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
**075 559 3232**



## காணி விற்பனைக்குண்டு

மருதனார் மடம் உரும்பிராய் வீதி - 2,13/4 பரப்பு, திருநெல்வேலி நாவலடி வீதி - 1 பரப்பு 5.36 குளி 20 அடி தார் பாதை வசதி உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 104 8865**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கோவளத்தில்...

மேரி ரீட்டா (வயது-52) ஆகிய இருவ ருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்களின் இரு பிள்ளைகளில் ஒருவர் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில், இன்னொரு பிள்ளை உறவினரின் வீட் டுக்குச் சென்றிருந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கழுத்து நெரிக்கப்பட்டு கற்களால் தாக் கப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டுள்ள னர் என்று உடற்கூற்றுப் பரிசோதனை யின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்த இரட்டைக் கொலைகள் தொடர்பில் இதுவரை சந்தேகநபர்களாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தேடப்பட்டு வருகின்றார். பருத்தித் துறை பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-100-26)

## முறைப்பாடு...

ஆணைக்குழு அறிவித்துள்ளது.
கடந்த ஒரு வாரத்துக்குள்ளேயே மிக அதி களவான முறைப்பாடுகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன. அத்துடன் 10 தேர்தல் வன் முறைகளும் பதிவாகியுள்ளன. (அ-ம)

## அதித...

இதனால் குறித்த இளைஞர் தனது பாட் டியாருடன் வசித்து வந்துள்ளார். 29ஆம் திகதி அளவுக்கு அதிகமான போதையில், வாந்தி எடுத்துவிட்டு இரவு தூக்கத்துக்குச் சென்றுள்ளார். இதையடுத்தே இன்று காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம் குமார் மேற்கொண்டார். (அ-ம-26-23)

## மருத்துவர்...

விசாரணைகளுக்காக அவர் நீதிமன்றத் தில் முன்னிலையாகவில்லை. இதைய டுத்தே, மருத்துவர் அர்ச்சுனாவைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்து மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
அத்துடன் அர்ச்சுனாவுக்குப் பிணை நின்றவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததைத் தொடர்ந்து அவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (அ-ம-26-56)

## அரச...

38 ஆயிரத்து 50 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-ம-110)


## அரச அதிகாரத்தை..

நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரை யொன்றில் உரையாற்றும்போதே முன் னாள் ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரி வித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பெரும்பான்மை இல்லாத நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் தெரிவாகியுள்ள சந் தர்ப்பத்திலேயே இந்தத் தேர்தல் இடம் பெறுகிறது. அதனால் இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவது கடினம் என நாங்கள் நினைக்கவில்லை. அரசாங்கத்தைக் கைப்பற்ற நாங்கள் முயற்சிக்க வேண் டும். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்க் கட்சியில் நாங்கள் பலமான இடத்துக்கு வரவேண்டும். அரசாங்கம் தற்போது பயணிப்பதை பார்க்கும்போது எதிர்க்கட் சியில் இருந்து அரச அதிகாரத்தை பெற் றுக்கொள்ள முடியும் என்றும் தோன்று கின்றது.
அரச ஊழியர்களின் சம்பளத்தை அதி கரிப்பதற்கு அமைச்சரவை அதிகாரிக ளின் அனுமதியை பெற்றுக்கொள்ள வில்லை என்று பிரதமர் ஹரிணி அமர சூரிய தெரிவித்திருந்தார் என நான் அறிந்தேன். அமைச்சரவை செயற்படு வதற்கு அதிகாரிகளின் அனுமதி தேவை என பிரதமர் தெரிவித்திருக்கின்றார். அரசமைப்பு தொடர்பில் இவர் எங்கு கற் றுக்கொண்டார்? அரசமைப்பில் 43 ஆவது உறுப்புரையை பாருங்கள். நாட்டை நிர்வகிப்பது அமைச்சரவையா கும். அரசமைப்பு தொடர்பில் தெரிந்து கொள்ள வேண்டிய அல்லது கற்றுக் கொள்ள வேண்டிய தேவை பிரதமருக்கு இருந்தால், நான் வந்து கற்பிக்கின் றேன்.
எமது ஆட்சிக்காலத்தில் சம்பள அதிகரிப் பைக்கோரிய தொழிற்சங்கங்கள் எங்கே? இவர்களில் அதிகமானவர்கள் தற்போது அரசாங்கத்துடனே இருக்கின் றனர். இந்த தொழிற்சங்கங்கள் அரச ஊழியர்களை காட்டிக்கொடுத்துள்ளன என்பதே உண்மை - என்றார். (அ-ம)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் – 2024

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் பெருமதிப்புக்குரிய அரச சேவையாளர்களே.!



ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியற்களம் திறக்கப்பட்ட 2010களில், அரச சேவையிலிருந்து அரசியற்களம் புகுந்த எனது 15 ஆண்டுகால மக்கள் பணி குறித்து தாங்கள் நன்கறிவீர்கள்.

அந்தப் பணிகளது தொடர்ச்சியின் தேவையுணர்ந்தவர்களாக, உங்களின் குரலாய் என்றும் ஒலிக்கத் தயாராயுள்ள எனக்கு மீளவும் ஆணை தாருங்கள் என்று உரிமையுடன் வேண்டிநிற்கிறேன்.

தமிழ்த்தேசியத்தின் அடையாளமான வீட்டிற்கு எதிரேயும், எனது இலக்கமாகிய ஏழிற்கு மேலேயும் நீங்கள் இடும் புள்ளடி, இனியொரு விதி செய்யும்.



சிவஞானம் சிறீதரன்.
நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.

தாயகம்
தேசியம்
தன்னாட்சி


## உயர்தரப்...

உயர்தரப் பரீட்சை தொடர்பான அட்டவ ணையைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலி ருந்து பதிவிறக்கம் செய்யுமாறு உயர்த ரப் பரீட்சார்த்திகளை அவர் அறிவுறுத்தி யுள்ளார். (அ-ம-66)

## 6 ஆம்...

கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 23ஆம் திகதி அதி காலை மற்றும் காலை வேளைகளில் குளிரான வானிலை நிலவும் - என்றார். (அ-ம-66)



# அபிலாஷைகள் நிறைவேறுவதற்கு மாம்பழம் சின்னத்துக்கு வாக்கிடுக

### ஈ.சரவணபவன் கோரிக்கை

கொழும்பு, ஒக். 31
இன்று தீபாவளித் திருநாள். தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் நாள். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை கள் நிறைவேறவும், பொருளாதார அபி விருத்தி ஏற்படவும் அரச ஊழியர்கள் உங்கள் வாக்குகளை மாம்பழம் சின் னத்துக்கு வாக்களியுங்கள் என்று இவ் வாறு ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது
தமிழ் மக்களின் உரிமைக்கான போராட் டங்களுக்குச் சமாந்தரமாக தமிழ் மக்க ளின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த தேவை இருக்கின்றது. இம் முறை மாம்பழம் சின்னத்தில் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழ் மக்களின் பொருளாதார நிலை மைகளை மேம்படுத்தும் திட்டங்களைக் கொண்டிருக்கின்றோம். அவற்றை நடை முறைப்படுத்த மக்களின் ஆணையைக் கோருகின்றோம்.
பொருளாதார நெருக்கடி, வேலை வாய்ப் பின்மை என்பவற்றால் தமிழ் இளை யோர்கள் புலம்பெயர்கின்றனர். இந்த இளவயதினரின் வெளியேற்றம் தமிழ் மக்களின் இருப்புக்கு ஆபத்தானது. அவர்களுக்கான வேலை வாய்ப்பை எங்களது பிரதேசங்களில் உருவாக்கு வது அவசியமானது. தமிழர் தாயகத்தில் உள்ள பெரும் தொழிற்சாலைகள் கவ னிப்பாரற்று இருக்கின்றன. அவை மீள இயங்குமானால் ஆயிரக்கணக்கானவர் களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கமுடியும்.
அவற்றுக்கான திட்டங்களை நாம் கொண்டிருக்கின்றோம். புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து தமிழர் தாய கப் பிரதேசத்தில் பொருளாதார அபிவி ருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவ தற்கான திட்டங்களை வகுத்திருக் கின்றோம்.
நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக் கும் அரச உத்தியோகத்தர்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். பொரு ளாதாரம், கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உறுதி யான தீர்வுகளை முன்வைக்கும் மாம்ப ழம் சின்னத்துக்கு வாக்களிக்கும் வேண் டும். உங்கள் அனைவருக்கும் எனது தீபாவளி வாழ்த்துக்கள் - என்றார். (ம)


**Front Office Trainee / Front Office Assistant / Receptionist - Hotel**
Eligibility :-
- Successfully Completed G.C.E O/L,
- Excellent Communication in English
- Good Knowledge of Msoffice .
- Age Below 25 Years.

Contact No: 070 745 8567

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 986 6032


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்


ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி

பாராளுமன்ற தேர்தல் - 2024

வன்னித் தேர்தல் மாவட்டம்

1 2 3 4 5 6 7 8 9

தி.இடபாரூடன்



மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

எங்கள் வன்னி எங்கள் மக்களுக்கு

கணினி வடிவமைப்பாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு முழுநேர / பகுதி நேர (இரவு) கணினி வடிவமைப்பாளர் (Graphic Designer) தேவை.



(பல்கலைக்கழகம் படிக்கும் மாணவர்களும் / பழக விரும்புவர்களும் தொடர்புகொள்ளலாம்)

ஆர்வமுள்ளவர்கள் 01.11.2024 ஆம் திகதி

* காலை - 9.00 - 12.00

* மாலை - 06.00 - 8.00

நேரில் சமுகம் தரவும்

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

V2 Travels

0768226244

வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி

வாடிக்கையாளர்களுக்கு எமது மனம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்

V.K. RAJARATNAM

இல.200, கஸ்தூரியார் வீதியிலும்

வியாபித்துள்ளது. சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்களையும் இலத்திரனியல் பொருட்களையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

V.K. RAJARATNAM

1C Stanly Raod, Jaffna.

(காட்சி அறை)

சொந்தமண்ணில் சொந்தங்களுக்கான தெரிவு

அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



DIWALI SALE

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன Design களிலான புத்தம் புதிய பெண்களுக்கான சாறி வகைகள், சல்வார் வகைகள், பட்டுப்பாவாடைகள், டொப் வகைகள் மொடன் சட்டைகள், சிறுவர்களுக்கான அனைத்து விதமான ஆடை வகைகள் மற்றும் ஆண்களுக்கான ஆடை வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



SUXUS WEAR

சக்சஸ் வெயார்

New Clothes, New Fashion

இல: 102, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2997

இல: 219 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 222 2967

Suxuswear@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.